14.06.2024

O.S.No.128-2018

வா.சா.1.திரு.சின்னார் என்ற அடைக்கண் த.பெ.அடைக்கண்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1. எனது தாயார் பெயர் நயினம்மாள் என்றால் சரிதான். இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபனை தஸ்தாவேசுக்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-2 முதல் வா.சா.ஆ-5 வரையிலான ஆவணங்களுக்கும் இந்த வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் கிடையாது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.132/2012 என்ற வழக்கு இறந்துபோன நயினானுக்கு நான் வாரிசு என்று தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். அந்த வழக்கிற்கான தீர்ப்பாணைதான் வா.சா.ஆ-2 மற்றும் வா.சா.ஆ-3 என்றால் சரிதான். அசல் வழகரு எண்.308/2014 வழக்கு இறந்து போன பி.எ.அடைக்கண் என்பவருக்கு நான் வாரிசு என தாக்கல் செய்யப்பட்ட வழககின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை தான் வா.சா.ஆ-4 மற்றும் வா.சா.ஆ-5 என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பு நகலில் தாவா சொத்து குறித்து எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான்.

2. நான் மதுரை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் SOP NO.85/1993 என்ற வழககு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் பி.அ.நயினான் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். பி.அ.அடைக்கண் விட்டுச்சென்ற வங்கி வைப்பீடு சம்பந்தமான வழககுதான் மேற்சொன்ன SOP No.85/1993 என்றால் சரிதான். அந்த வழக்கில் பி.அ.அடைக்கண் என்பவருககு பி.அ.அழகன், பி.அ.பிச்சன், பி.அ.நயினான், எனது தாயார் நயினம்மாள் ஆகியோர்கள் உடன்பிறந்தவர்கள் என்றும், பி.அ.அடைக்கண் இறந்து போய்விட்டார் என்றும், அவரது ஒரே சகோதரி நயினம்மாள் எனதுதாயார் என்றும், எனது தாயார் பாகத்திற்கு சேர வேண்டியது எனக்கு வேண்டும் என்றும், அப்போது உயிருடன் இருந்து எனது தாயாரின் இளைய சகோதரர் பி.அ.நயினான் தகராறு செய்தததால் அவருக்கு எதிராக நான் வழக்கு தாக்கல் செய்ததால் SOP 85/1993 தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் அடைக்கம்மாளின் மகன் என்று கூறி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் பி.அ.அடைக்கண் என்பவர் எனது தாய் வழி பாட்டனார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல அவர் எனது தாய்மாமன் ஆவார். எனது பிராதிலும், நிருபணவாக்குமூலத்திலும் பி.அ.அடைக்கண் என்பவர் எனது தாய் வழி பாட்டன் என்று சொல்லி ள்ளேன் என்றாலும், அதனை மறைத்து இந்த வழககிற்கா கபொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும சரியல்ல.

3.வா.சா.ஆ-1 சிட்டா என்பது வா.சா.ஆ-4 மற்றும் வா.சா.ஆ-5 தீர்ப்பின் அடிப்படையில் வழங்கப்பட்ட வா.சா.ஆ-6 வாரிசு சான்றிதழை அடிப்படையாக கொண்டு பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ-4 மற்றும் வா.சா.ஆ-5 ஆவண வழக்கு நடவடிக்கையிலோ, பட்டா வழங்கக்கோரி தாக்கல் செய்த மனு நடவடிக்கையிலோ இந்த பிரதிவாதியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பி.அ.அடைக்கண் உடன்பிறந்தவர்தான் பி.அ.நயினான் என்றால் சரிதான். பி.அ.அடைக்கண் இறந்த பின்புதான் பி.அ.நயினார் இறந்துபோனார் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் திருமணம்

ஆகாமல் இறந்து விட்டார்கள். பி.அ.அடைக்கண் இறந்த பின்புஅவரது சொத்துக்களை அடைந்து கொண்ட பி. அ.நயினார் என்பவர் 26.10.1994 ஆண்டில் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம்எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல, அது பொய்யானது. அந்த உயில் ஆவணத்தினை பொறுத்து கூடுதல் ஆட்சேபணையோ, முதல் விசாரணையை மறுத்தோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் வீடு உள்ளது என்றால் சரியல்ல, வீடு இருந்ததினை இடித்து எடுத்துவிட்டேன், தற்போது பொட்டலாகதான் உள்ளது. மேற்படி உயிலில் வீடு காட்டப்பட்டுள்ளது என்றால் அது பொய்யானது.

4. நான் தாவா சொத்தில் இருந்த வீட்டினை இடித்து எடுத்தாக சொல்லப்படுவதால் அந்த வீட்டின் கதவு என்னிடம்தான் உள்ளது என்றால் சரிதான். அந்த கதவு எண்.3/6/70 என்றால் நான் படிக்காததால் எனக்கு அதை பற்றி தெரியாது. அந்த வீட்டின் அளவு 20X18 என்றால் நான் படிக்காதவன் என்பதால் எனக்கு அதை பற்றி தெரியாது. அநத் வீட்டினை சுற்றி காலியிடம் இருந்தது என்றால் சரிதான். அந்த காலியிடத்திற்கு கீழ்புறம்தான் பிரதிவாதியின் ஆர்.சி.சி வீடுஎன்றால் சரிதான். வழக்கு சொத்தில் இருந்ததாகவும் அதனை நான் இடித்து அப்புறப்படுத்தி விட்டதாக கூறுவதால், அந்த சங்கதியை இதுவரையில் இந்த வழக்கு நடவடிக்கையில் எங்கும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் குடியிருப்பது கம்பூர் என்றால் சரிதான். தாவா சொத்து இருப்பது சின்னகற்பூரம்பட்டி என்றால் சரிதான். இரண்டு ஊர்களுக்கும் இடையில் சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் உள்ளது என்றால் சரிதான். தாவாசொத்தில் உள்ள வீட்டிற்கு தற்போது வரை பி.அ.நயினான் பெயரில் வீட்டுவரி ரசிது உள்ளது என்றால் நான் வரி கட்டவில்லை, எனக்கு அதை பற்றி தெரியாது. தாவா சொத்தில் வீடு உள்ளது என்றும், அதில் பிரதிவாதி புழஙகி வருகிறார் என்றும், பி.அ.நயினான் பெயரில் தற்போது வரை வரி செலுத்தி வருகீறார் என்றும் பிரதிவாதி தனது எதிர் வழக்குரையில் சொல்லி உள்ளார் என்றாலும் சரிதான், அது அனைத்தும் பொய்யானது. அவ்வாறு பிரதிவாதி கூறுவது பொய்யான சங்கதி என்று மறுத்து நான் பதில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். (குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)